www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

TELO

# சோசலிசத் தமிழீழத்தை நோக்கிய புரட்சிநடவடிக்கையின் ஓர் முன்னெடுப்பு!

சிறீலங்கா முதலாளித்துவ அரசுப் பொறியமைப்பில் ஓர் பாரிய உடைப்பு !!

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதல் மூலம் தமது இராணுவ நடவடிக்கையினை முன்னெடுத்து ஓர் வரலாற்றுச் சாதனையை ஏற்படுத்திய தமிழீழ விடுதலை இயக்கத்தின் [TELO] இராணுவப் பிரிவு இதனையும் மிஞ்சும் வகையில் மாங்குள புகையிரதப் பாதையில் வைக்கப்பட்ட கண்ணி வெடிகள் மூலம் பதினொரு புகையிரதப் பெட்டிகளை தகர்த்து அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த 200க்கும்மேற்பட்ட இராணுவத்தை அழித்ததன் மூலம் சிறீலங்கா முதலாளித்துவ அரசுப் பொறியமைப்பில் ஓர் பாரிய உடைப்பை ஏற்படுத்தியுள்ளனர்

இராணுவ முகாமொன்றிற்கு பெருந் தொகையான நவீன ஆயுதங்களை கொண்டு சென்ற இராணுவத்தினர் அடங்கிய புகையிரதம் மாங்குளத்திற்கு அண்மையில் (19-1-1985) இரவு 8.30 மணியளவில் கண்ணிவெடிகள் மூலம் தகர்க்கப்பட்டது. அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த இருநூறுக்கும்மேற்பட்ட இராணுவத்தினர் அழிக்கப்பட்டதுடன் அவர்கள் கொண்டு சென்ற ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இதே வேளையில் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த விடுதலை இயக்கத்தின் மற்றுமோர் இராணுவ பிரிவு மாங்குள சம்பவத்தை அடுத்து ஆனையிறவு முகாமிலிருந்து விரைந்த கவச வண்டியுடனான சிறீலங்கா இராணுவத்தினரை உமையாள் புரத்தில் வைத்து கண்ணி வெடிகள் மூலம் தாக்கி தமிழீழத்தில் கொரில்லா போர்முறைக்கு ஓர் முழுமையான வடிவம் கொடுத்துள்ளனர்.

"புரட்சிகர சூழ்நிலைகளை உருவாக்கும் நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் போராட்ட முன்னெடுப்புகளை வலுப்படுத்துவோம்"

ஒன்றுபடுவோம், போராடுவோம், வெற்றிபெறுவோம்

— பிரான்சு கிளை —

T.E.L.O [பிரான்சு கிளை]
78 RUE J.P TIMBAUD,
75011 PARIS,
[redacted]

பி. இதழ்-01.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'ரெலோ' உரிமைகோரியுள்ளது 3 குழுக்களாகத் தாக்கினர்!"

## அரசதரப்பில் வெளியிடப்பட்ட தகவல்

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தரைமட்டமான சாவகச்சேரி பொலிஸ் நிலைய இடிபாடுகளுக்குள்ளிருந்து நேற்று இரவு வரை 29 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 19 சடலங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் கொழும்பில் பொலிஸ் தலைமைக் காரியாலயம் நேற்றிரவு தெரிவித்தது.

பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின்னர் அங்கிருந்த சகல ஆயுதங்களும் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. இத்தாக்குதலின் போது ஒரு சில பொலிசாரே தப்பித்திருக்கலாமென்றும் பொலிஸ் நிலையக் கட்டிடம் பெருஞ் சேதமடைந்துள்ளதாகவும் கடைசியாகக் கிடைத்த தகவல் கூறுகிறது.

இப்பொலிஸ் நிலையத்தில் அதிரடிப் படையினர் உட்பட 90 பேர் வரை கடமையாற்றுவதாகவும் சம்பவ தினமான கடந்த செவ்வாய்க்கிழமை லீவில் சென்றவர்கள், இரவு வேலை செய்பவர்கள். ஆனையிறவு தடை முகாமில் கடமைக்குச் சென்றவர்கள் தவிர ஏனையோர் கடமையிலிருந்ததாக நம்பப்படுகிறது.

### மிகப் பெரிய தாக்குதல்

உத்தியோக பூர்வமான தகவலின்படி பாதுகாப்புப் படையினர்மீது நிகழ்த்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும். இத்தாக்குதலில் 250 பேர் பங்குபற்றி இருக்கிறார்கள்

தமிழீழ விடுதலை இயக்கம் [ரெலோ] இத்தாக்குதலுக்குத் தானே பொறுப்பு என்று உரிமை கோரியுள்ளது.

ஒரு குழுவினர் ராணுவத்தைப்போன்று சீருடையணிந்திருந்தார்கள். வெளிநாட்டுப் பயிற்சி முகாமிலிருந்து இந்த நோக்கத்திற்காக விசேடமாக அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள் என்பதை அவர்களின் சீருடை எடுத்துக் காட்டுவதாக இருந்தது

ராணுவச்சீருடையில் இருந்த முதலாவது குழுவைச்சேர்ந்த சுமார் 30பேர் புதிய நவீன ஆயுதங்களை வைத்திருந்தார்கள்.

Eelanadu — ஈழநாடு — வியாழக்கிழமை 22.11.1984

# Efficient Tamil attack worries security chiefs

Sources said police strength at Chavakachcheri had been at its maximum, combining regular police officers and recently-trained police commandos.

Late last night, the Government was still reticent about casualties. This was the biggest operation ever mounted by the Tamil guerrillas in the troubled Jaffna Peninsula and there were fears of a backlash in the south.

The latest attack signifies a new phase in Tamil guerrilla operations, involving bigger, bolder and more efficient raids

This new professionalism must worry the security authorities.

The Tamil Eelam Liberation Organisation (Telo), which claimed responsibility for the operation, put the number of dead as high as 130 "commandos and soldiers."

... This was no hit-and-run ambush, but a fully-fledged military operation, involving about 250 men and large quantities of arms and explosives. It is unlikely that it could have succeeded without the support, passive if not active, of the local Tamil population.

From Eric Silver in New Delhi

From Roland Edirisinghe in Colombo

THE GUARDIAN

November 22 1984

## இலங்கை ராணுவ ரெயில் கவிழ்ப்பு

# 240 பேர் சாவு

சென்னை, ஜன. 22—

இலங்கையில், ராணுவத்தினர் சென்ற ரெயிலுக்கு வெடி வைக்கப்பட்ட சம்பவத்தில், 240 ராணுவத்தினர் இறந்திருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது.

சரியான சாவு எண்ணிக்கையை வெளியிட்டால், ராணுவத்தினர் பீதியடைவார்கள் என்பதால், எண்ணிக்கையை இலங்கை அரசு குறைத்து சொல்கிறது.

### விடுதலை இயக்கம்

வெடி வைத்து ரெயிலை கவிழ்த்தது, சுதந்திர தமிழ் ஈழத்துக்காக போராடி வரும் "தமிழ் ஈழ விடுதலை இயக்கம்" ஆகும். இந்த இயக்கம், ஸ்ரீசபாரத்தினம் தலைமையில் இயங்குகிறது.

ஏராளமான நவீன ஆயுதங்களையும் இந்த ரெயிலில் கொண்டு சென்றார்கள். ரெயில் கவிழ்க்கப்பட்டதும் ஆயுதங்களை விடுதலை இயக்கத்தினர் கைப்பற்றிக் கொண்டனர்."

தினத்தந்தி 22—1—85

[இலங்கைக் பொலிஸ் நிலைய தாக்குதலில் போது சேதமடைந்த 'இராணுவ' படை விசேஷ உத்தரவுக்கான படைகளை விட்டுப்போகும் ]